நிலவுகிறது.

இப்போது தலைமையுடன் நெருங்கிச் சென்றுள்ள ஜாபர் அலி, முதல்வர் கருணாநிதியைச் சந்தித்தார். அவருக்கு சமீபத்தில் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பின் படங்கள் உள்ளூர் பத்திரிகைகளில் இடம்பெற்றன. ஏன் கட்சியின் அதிகார பூர்வ நாளேடான முரசொலியிலேயே வெளிவந்தது. இதெல்லாம் புதுக்கோட்டை மாவட்டத்தில் மீண்டும் ஜாபர் அலிக்கு ஓர் 'அரசியல் முக்கியத்துவத்தை' அளித்துள்ளது. இதற்கிடையில் இளைஞர்களை ஒருங்கிணைப்பதில் தீவிரமாக 'ஒர்க்' செய்து வருகிறார் அவர் என்றும் தகவல். குறிப்பாக பல்வேறு ரசிகர் மன்றங்களில் உள்ள இளைஞர்கள் ஜாபர் அலியின் பக்கம் இருக்கிறார்கள் என்பது தி.மு.க.விற்கு இம்மாவட்டத்தில் ஒரு ப்ளஸ் பாயின்ட்! புதுக்கோட்டை நகரத்தில் எந்த தியேட்டரில் புதிய படம் போட்டாலும், அங்கு ஜாபர் அலி தலைமையில்தான் இளைஞர்கள் தங்கள் ஹீரோக்களைக் கொண்டாடுகிறார்கள்.

இது ஒருபுறமிருக்க ரகுபதிக்கும், துணை முதல்வர் ஸ்டாலினுக்கும் இடையே இப்போது 'பழைய பாசம்' மீண்டும் ஏற்பட்டுள்ளதாம். இதற்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முக்கிய அதிகாரிகள் துணை முதல்வர் ஸ்டாலினிடம் ரகுபதி பற்றி சொன்ன பாஸிட்டிவான கருத்துக்களும் காரணம் என்று கூறும் புதுக்கோட்டை உடன்பிறப்பு ஒருவர்,



ரகுபதி

# வரும் ஸ்டாலின்"!

## -புதுகையில் களைகட்டும் தி.மு.க. பாலிடிக்ஸ்!

"தி.மு.க.விற்கு வந்த ரகுபதிக்கு உடனடியாக எம்.பி. எலெக்ஷனில் போட்டியிட வழி வகுத்து, மத்திய அமைச்சராகவும் ஆக்கியது தளபதிதான். இடையில் வேறு சிலர் தூண்டிவிட்டதால் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் நீங்கிவிட்டன. இப்போது ரகுபதி முழுக்க முழுக்க தளபதி ஸ்டாலினின் நம்பிக்கைக்குரியவராக இருக்கும் விதத்திலேயே செயல்படுகிறார். இதை தளபதியும் புரிந்து கொண்டிருக்கிறார். இந்நிலையில் வருகின்ற ஜூலை 28ஆம் தேதி முன்னாள் அமைச்சர் ரகுபதிக்கு அறுபதாம் கல்யாணம் நடக்கப் போகிறது. அன்று வைதீக முறைப்படி திருமணம் நடக்குமாம். அதன்பிறகு 30-ஆம் தேதி இந்தியாவின் முதல் டாக்டர் முத்துலட்சுமியின் முழு உருவச் சிலையை புதுக்கோட்டையில் திறந்து வைக்கத் தளபதி வருகிறார். அன்றைய தினம் ஜே.ஜே.கல்லூரியில் உள்ள கலைஞர் அரங்கத்தில் பிரம்மாண்டமான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளார் ரகுபதி. அங்கு நடைபெறும் அறுபதாம் கல்யாண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ரகுபதி தம்பதியினரை வாழ்த்துகிறார் தளபதி. இந்நிகழ்ச்சிக்குப் பிறகு தளபதி- ரகுபதி உறவில் மேலும் நெருக்கம் ஏற்படும். இனி ரகுபதி அணியும் சுறுசுறுப்பாகக் களமிறங்கும். ஆகவே தேர்தல் வரும் நேரத்தில் இரு அணிகளும் வேகமாக செயல்படுவது கட்சிக்கு நல்லதுதானே" என்றார்.

ஆகவே ஸ்டாலின் வருகையை வைத்து 'ஜாமாய்க்கப்' போகிறது முன்னாள் மத்திய அமைச்சர் ரகுபதியின் அணி என்பதே இன்றைய ஹைலைட்ஸ்!

படங்கள்: வேணு